1984 மார்ச் 23]

அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராமிய நூற்புக் கூடங்கள் அமைக்கும் திட்டம்.

424—(*வினா எண். 20660) திரு. சி. கணேசன் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராமிய நூற்புக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களில் இயங்குகின்றன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராமிய நூற்புக் கூடங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு சி. கணேசன் : தலைவரவர்களே, அச்சிறுபாக்கம் தொகுதியில் கிராம நூற்புக் கூடங்கள் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கிராம நூற்புக் கூடங்கள் என்பது முழுக்க முழுக்க வேலை வாய்ப்பில் தாய்மார்களுக்குப் பயன்படும் என்பதால் அரசு இதற்கு ஊக்கமளித்து வருகிறது. ஆகவே, இந்த கதர்துறையின் சேவை நடவடிக்கை அச்சிறுப்பாக்கம் தொகுதியிலும் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக எதிர்காலத்தில் ஆனால் மிகக் குறுகிய காலத்திலே அங்கே செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, தற்போது அச்சிறுப்பாக்கம் தொகுதியில் நூற்புக் கூடம் தொடங்கும் குறிப்பு எதுவும் இல்லை என்றாலும், அங்கே அதற்கு ஏற்ற வசதிகளும் சான்றுகளும் இருக்குமானால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

Developing Mandapam as a Major Fishing Research Centre.

425 **Q. No.* 19161 THIRU P. VENKATASUBRAMANIAM : Will the Hon. the Minister for Fisheries be pleased to state—

(*a*) whether the Government have examined the necessity to develop Mandapam as a Major Research Centre in fishing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) மற்றும் (ஆ): தற்போது மண்டபத்தில் சிறிய அளவிலான ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதனை பெரிய அளவில் அபிவிருத்தி செய்யும் திட்டம் பரிசீலனையில் இல்லை. மேலும் மண்டபத்தை பெரிய அளவிலான மீன் ஆய்வகப் பகுதியாக அபிவிருத்தி செய்யும் திட்டமும் பரிசீலனையில் இல்லை.